Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 050 | புதன்கிழமை Wednesday | 20.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# அரசுப் பேருந்து ஓட்டுநர்கள் பணியின்போது செல்போன் பயன்படுத்த தடை

## தமிழக அரசு அதிரடி உத்தரவு



ஓட்டுநர்கள் பணியின் போது கைப்பேசி பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசு பேருந்து ஓட்டுநர்கள் சட்டைப் பையில் கைப்பேசி வைக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் அரசுப் பேருந்து ஓட்டுநர்கள் பணியின் போது கைப்பேசி (மொபைல் போன்) பயன்படுத்துவதற்கும், அதனைத் தங்களது சட்டைப் பையில் வைத்திருப்பதற்கும் தமிழக அரசு போக்குவரத்துக் கழகம் தடை விதித்துள்ளது. விபத்துக்களைத் தவிர்த்து, பயணிகளின் உயிரைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பைக் கருதி, பேருந்தை இயக்கும் போது ஓட்டுநர்கள் கைப்பேசி வைத்திருக்கவோ அல்லது பயன்படுத்தவோ கூடாது என்று ஏற்கனவே பலமுறை சுற்றறிக்கைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், பல ஓட்டுநர்கள் தங்களது சட்டைப் பையிலேயே கைப்பேசியை வைத்திருப்பதோடு, பேருந்தை ஓட்டும் போதும் அவ்வப்போது அதைப் பயன்படுத்தி வருவதாகப் பயணிகளிடமிருந்து தொடர்ந்து போக்குவரத்துத் துறைக்குப் புகார்கள் வந்த வண்ணம் இருந்தன. இதுதொடர்பாக நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வில், ஓட்டுநர்கள் பணியின் போது கைப்பேசியைப் பயன்படுத்துவதாலேயே கவனச்சிதறல் ஏற்பட்டு, அவ்வப்போது பெரிய விபத்துகளும், தேவையற்ற உயிர் இழப்புகளும் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தற்போதைய புதிய உத்தரவின்படி ஓட்டுநர்கள் பணியின் போது கைப்பேசியை பயன்படுத்துவது மட்டுமின்றி, அதனைத் தங்களது சட்டைப்பையில் வைத்திருப்பதும் முற்றிலுமாகத் தடை செய்யப்படுகிறது. இந்த உத்தரவு முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை கண்காணிக்கப் பேருந்து நிலையங்களிலும், பேருந்து வழித்தடங்களிலும் (Bus Routes) அதிகாரிகள் தீவிர ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். ஆய்வின் போது எந்தவொரு அரசுப் பேருந்து ஓட்டுநராவது கைப்பேசி வைத்திருப்பது அல்லது பயன்படுத்துவது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட ஓட்டுநர் மீது எவ்விதப் பாரபட்சமுமின்றி கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்ய அரசு எடுத்துள்ள இந்த அதிரடி நடவடிக்கை, பயணிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்த 2022-ஆம் ஆண்டே தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டிருந்தது. அதன்படி,

ஓட்டுநர்கள் பணி நேரத்தில் சட்டைப்பையில் செல்போன் வைத்திருக்கக் கூடாது. அதனை பேருந்தின் நடத்துநரிடம் (Conductor) ஒப்படைத்துவிட வேண்டும். பணி முடிந்த பிறகே அதைத் திரும்பப் பெற வேண்டும்.

நடத்துநர்கள் பகல் நேரத்தில் முன் இருக்கையில் அமரக் கூடாது. பேருந்தின் பின்புறம் உள்ள கடைசி இடது இருக்கையில் அமர்ந்து, இரண்டு படிக்கட்டுகளையும் கண்காணிக்க வேண்டும்.

தொலைதூரப் பேருந்துகளில் (Long Distance Buses) இரவு 11 மணி முதல் காலை 5 மணி வரை, நடத்துநர் ஓட்டுநரின் அருகில் முன் இருக்கையில் அமர்ந்து, ஓட்டுநருக்குத் தூக்கம் வராமல் துணையாக இருக்க வேண்டும்.

இந்த விதியை மீறும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் மீது சட்டப்பிரிவுகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டது.

# தி.மு.க.வில் இணைந்தார் முன்னாள் இளைஞர் காங்கிரஸ்

## மாநில பொதுச்செயலாளர் அலீம் அல் புகாரி



சென்னை: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இளைஞர் காங்கிரஸ் கட்சியின் மாநில முன்னாள் பொதுச் செயலாளர் அலீம் அல் புகாரி திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தார்.

இது தொடர்பாக திமுக வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், இன்று (19.5.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இளைஞர் காங்கிரஸ் கட்சியின் மாநில முன்னாள் பொதுச் செயலாளர் அலீம் அல் புகாரி தி.மு.கவில் இணைந்தார். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், திமுக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ, திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யமொழி, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன் ஆகியோர் உடனிருந்தனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி, திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெக உடன் கூட்டணி அமைத்தது. இதை அலீம் அல் புகாரி கடுமையாக விமர்சித்திருந்தார். காங்கிரஸ் கட்சி அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் அவரை இடைநீக்கம் செய்து அறிவித்தது. இதன் தொடர்ச்சியாக காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்த அலீம் அல் புகாரி, தற்போது திமுகவில் இணைந்துள்ளார்.

# எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக தொடர் தோல்வி: சி.வி.சண்முகம் குற்றச்சாட்டு



சட்டசபை தேர்தலில் அதிமுக படுதோல்வி அடைந்துள்ளது. எடப்பாடி பழனிசாமி தலைமையில் தொடர் தோல்விகளை அதிமுக சந்தித்து வருகிறது.

அதிமுகவின் வாக்கு வங்கி தொடர்ந்து சரிந்து வருகிறது. தேர்தல் தோல்விக்கான காரணத்தை ஆய்வு செய்ய வேண்டும். நீக்கப்பட்டவர்களை இணைத்து அதிமுகவை வலிமைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினோம். அதிமுக இணைப்பை எடப்பாடி பழனிசாமி ஏற்க மறுத்தார். வலிமையான கூட்டணி அமைக்கப்படாததால் தோல்வி அடைந்துள்ளோம்.

சட்டசபை தேர்தலில் தவெகவுடன் கூட்டணி வைக்க நாங்கள் வலியுறுத்தினோம். கூட்டணி பேசவந்த தவெக நிர்வாகிகளை எடப்பாடி பழனிசாமி உதாசினப்படுத்தினார். டாக்டர் கிருஷ்ணசாமியையும் கூட்டணியில் சேர்க்க எடப்பாடி மறுத்தார். கூட்டணி அமையக்கூடாது என வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்தார். தேமுதிகவை ஏளனம் செய்தார்; அது அரை சதவீத கட்சி என எடப்பாடி பழனிசாமி கூறினார்.

முன்பே கட்சியினரை அரவணைத்திருந்தால் தேர்தலில் வெற்றிபெற்று இருக்கலாம்; எடப்பாடி பழனிசாமி முதல்-அமைச்சர் ஆகியிருக்கலாம். அதிமுகவில் இணைய வந்த ஓ.பன்னீர்செல்வத்தை அடிப்படை உறுப்பினராக கூட எடப்பாடி பழனிசாமி ஏற்கவில்லை. கட்சியினரை அன்பாக பேசி எடப்பாடி பழனிசாமி அரவணைத்து செல்வதில்லை.

ஒருபுறம் பேசலாம் என கூறிவிட்டு மறுபுறம் நிர்வாகிகளை நீக்குகிறார் எடப்பாடி பழனிசாமி. பதவி பறிக்கப்படும் என நிர்வாகிகள் மிரட்டப்படுகின்றனர்; அச்சுறுத்தப்படுகின்றனர். இதுவரை 31 மாவட்ட செயலாளர்கள் பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். நாங்கள் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தயார்; பொதுக்குழுவுக்கு அழையுங்கள்; பொதுக்குழுவை கூட்டுங்கள், விவாதிப்போம்; அதில் முடிவெடுக்கலாம். பொதுக்குழுவில் என்ன முடிவு எடுத்தாலும் தலைவணங்கி ஏற்போம்.

தனது பதவிக்கு ஆபத்து வரும் என்பதால் அனைவரையும் ஒன்றினைக்க எடப்பாடி பழனிசாமி முயற்சிக்கிறார். தனிப்பட்ட விமர்சனத்தை முன்வைப்பது எடப்பாடியின் தலைமை பதவிக்கு அழகா?. தமிழகத்தில் அதிமுக ஆட்சி அமைய வேண்டும் என்பதே எங்களின் நோக்கம். இவ்வாறு ர் கூறினார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# ஒரே வாரத்தில் 2வது முறையாக உயர்ந்த பெட்ரோல், டீசல் விலை



சென்னை: பெட்ரோல், டீசல் விலையானது கடந்த ஐந்து நாட்களில் இரண்டாவது முறையாக இன்று உயர்த்தப்பட்டுள்ளது வாகன ஓட்டிகள் மத்தியில் அதிர்ச்சி யை ஏற்படுத்தியுள்ளது.

கச்சா எண்ணெய் விலை உயர்வு எதிரொலியாக நீண்ட இடைவெளிக்கு பிறகு கடந்த மே 15ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலையானது லிட்டருக்கு ரூ. 3 உயர்ந்தது. அதன்படி சென்னையில், பெட்ரோல் விலை 2.83 அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 103.67-க்கும், டீசல் விலை ரூ.2.86 அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 95.25க்கும் விற்பனை செய்யப்பட்டது. மீண்டும் லிட்டருக்கு ஏறத்தாழ 90 பைசா அதிகரித்திருக்கிறது. அதன்படி, சென்னையில் பெட்ரோல் விலையானது 82 பைசா அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 104.49க்கு விற்பனை செய்யப்படுகிறது. டீசல் விலையும் 86 பைசா அதிகரித்து ஒரு லிட்டர் ரூ. 96.11க்கு விற்பனை செய்யப்படுகிறது.

டெல்லியில் பெட்ரோல் விலையானது 87 பைசா அதிகரித்து ரூ.98.64க்கும், டீசல் விலையானது 91 பைசா அதிகரித்து ரூ. 90.67க்கும் விற்பனையாகிறது. மும்பையில், பெட்ரோல் விலை 91 பைசா அதிகரித்து ரூ. 107.59க்கும், டீசல் விலை ரூ. 94 பைசா அதிகரித்து ரூ. 94.08க்கும் விற்பனையாகிறது.

கொல்கத்தாவில், பெட்ரோல் விலை 96 பைசாவும், டீசல் விலை 94 பைசாவும் அதிகரித்து முறையே, ரூ. 109.70, ரூ. 96.07 என ஒரு லிட்டர் விற்பனை செய்யப்படுகிறது. ஜெய்ப்பூரிலும் பெட்ரோல் விலை லிட்டருக்கு 94 பைசாவும், டீசலுக்கு 92 பைசாவும் அதிகரித்திருக்கிறது.

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையே கடந்த பிப்ரவரி 28-ஆம் தேதி போர் மூண்டது. இது உலக நாடுகளிடையே எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு வழிவகுத்திருக்கிறது. உலகின் 20% கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு வர்த்தகமானது ஈரானின் வசமுள்ள ஹார்முஸ் நீரிணை வழியாக நடைபெறுகிறது. இந்த வழித்தடத்தில் கப்பல்கள் பயணிக்க பல்வேறு கட்டுப்பாடுகளும், அதிகப்படியான கட்டணங்களும் வசூலிக்கப்படுகின்றன.

தவிர, போரில் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிலையங்கள் கடும் சேதத்தை சந்தித்திருப்பதும் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணமாக மாறியிருக்கிறது. இதன் காரணமாக, கியாஸ் சிலிண்டர்கள், பெட்ரோல், டீசல் விலை கணிசமாக உயரும் என்று கூறப்படுகிறது. குறிப்பாக, பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ. 15 வரை உயரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இந்த சூழலை கையாளும் நோக்கில், அனைத்து நிறுவனங்களும் முடிந்தவரை வொர்க் ஃப்ரம் ஹோம் கலாச்சாரத்திற்கு மாறும்படி பிரதமர் மோடி வலியுறுத்தி இருந்தார். அதனை ஏற்று, டெல்லி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வீட்டிலிருந்தே வேலை செய்யும் முறையை ஐடி உள்ளிட்ட நிறுவனங்கள் பின்பற்ற தொடங்கி இருக்கின்றன.

இத்தகைய சூழலில் நீண்ட நாட்களுக்கு பிறகு கடந்த 15ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலையானது லிட்டருக்கு ரூ. 3 உயர்ந்த நிலையில், 5 நாட்களுக்குள் தற்போது மீண்டும் 90 பைசா உயர்ந்திருக்கிறது.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ராகுல் காந்தியை தரக்குறைவாகப் பேசி வரும் அனிதா ராதாகிருஷ்ணன் மீது கருப்பு மை வீசிப் போராட்டம் நடத்தப்படும்

## தூத்துக்குடி வடக்கு மாவட்டக் காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்



தூத்துக்குடியில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வடக்கு மாவட்டக் காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி பேசியதாவது: நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அடைந்த படுதோல்வியின் காரணமாக, திருச்செந்தூர் எம்.எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணன் முற்றிலும் தனது அரசியல் நிதானத்தை இழந்து, விரக்தியான நிலையில்பொதுமேடைகளில் கொச்சையாகப் பேசி வருகிறார். காங்கிரஸ் கட்சியினரை அவர் 'துரோகிகள்' என்று நா கூசாமல்விமர்சிக்கிறார். ஆனால், மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலம் தொட்டே, மத்தியில் பதவிகளையும் சுகங்களையும் அனுபவித்துவிட்டு, காங்கிரஸ் பேரியக்கத்திற்குத் தி.மு.க. செய்த துரோகங்கள் என்னென்ன என்பது இந்த ஊருக்கே நன்றாகத் தெரியும். இத்தகைய தி.மு.க.வின் தரம் தாழ்ந்த கொச்சைப் பேச்சுகளும், தலைவர்களின் அகங்காரமுமே தற்பொழுது அந்த இயக்கம் தமிழகத்தில் முழுமையாக அழிந்து போவதற்குக் முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது.

கடந்த தேர்தலில் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளரைத் திட்டமிட்டுத் தோற்கடிப்பதற்காக, அ.தி.மு.க.வினருடன் கைகோர்த்துக்கொண்டு உள்ளடி வேலைகளில் ஈடுபட்டார். கடந்த காலங்களில் தங்களுக்குத் தேவை ஏற்படும்போதெல்லாம் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியை டெல்லிக்குத் தூது அனுப்பி, காங்கிரஸ் கட்சியுடன் எப்படியாவது கூட்டணி வைக்க வேண்டும் என்று கெஞ்சிக் கூத்தாடி நின்றது இதே தி.மு.க.தான் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது.

தென் மாநிலங்கள் முழுவதும் தற்பொழுது காங்கிரஸ் தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி ஆட்சிகள் மிக கம்பீரமாக அமைந்து வருகின்றன. அண்டை மாநிலமான கேரளாவிலும் இன்று காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளது. இத்தகைய சூழலில், 'தலைவர் ராகுல் காந்தியின் முகத்தில் கரியைப் பூசுவோம்' என்று அனிதா ராதாகிருஷ்ணன் பொது மேடையில் ஆபாசமாக முழங்கியுள்ளார்.

எங்கள் உலகளாவிய தலைவர் ராகுல் காந்தியைப் பற்றித் தரக்குறைவாகப் பேச அனிதா ராதாகிருஷ்ணனுக்கு எவ்விதத் தகுதியும் இல்லை. இதோடு அவர் தனது கொச்சைத்தனமான பேச்சுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். இனிமேலும் அவர் எல்லையை மீறிப் பேசினால், அவர் தூத்துக்குடி மாவட்டத்தின் எந்தப் பகுதிக்கு வந்தாலும், காங்கிரஸ் தொண்டர்களைத் திரட்டி அவர் மீது 'கருப்பு மை' வீசிப் போராட்டங்களை நடத்துவோம்" என எச்சரித்தார். இந்த நேரடி அரசியல் மோதல் தூத்துக்குடி மாவட்ட அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### குழந்தைகள் பிறந்த நாள் விழா, நண்பர்களுடன் அரட்டை, சிறிய அளவிலான நிகழ்ச்சிகள் நடத்த

# இயற்கை சூழலுடன், முழுக்க வணக்கம் சைவ உணவுகளுடன் உருவாக்க பட்ட ஜூன் கஃபே, கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் துவங்கபட்டது



கோவையில் உணவு தொழில்நுட்ப துறை பயின்ற மாணவிகளான மேனகாப்ரியா, மற்றும் ஸ்ருதி, ஆகியோர் இணைந்து கோவை ஆர் எஸ் புரம் பகுதியில், ஜூன் கஃபே எனும் புதிய அங்காடியை உருவாக்கியுள்ளனர். இதன் திறப்பு விழா நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.. தொடர்த்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய மேனகாப்ரியா கூறியதாவது..

உணவு தொழில் நுட்பத்துறையில், பயின்ற தோழிகளான நாங்கள் இருவரும், கல்லூரி படிப்பை முடித்து விட்டு, இன்றைய இளைஞர்களை கவரும் வகையில் புதிய தொழில் துவங்கலாம் என நினைத்த பொழுது.. இத்தகைய கஃபே ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. அதனை உடனடியாக நிறைவேற்றலாம் என்ற முனைப்புடன் துவங்க பட்டது தான் இந்த ஜூன் கஃபே..

இங்கு இளைஞர்கள் விரும்பும் சுவை, மற்றும் சுகாதாரத்திற்க்கு முக்கியத்துவம் அளித்து உணவுகள், கேக்குகள், பாஸ்தாக்கள், மொஜிட்டோஸ், ஹாட் சாக்லேட், ப்ரௌனிஸ், சூப் வகைகள், ஸ்டார்ட்ர்ஸ், டெக்சார்ட்ஸ், மோக்டைல்ஸ், என பல விதமான உணவுகள் வழங்க பட உள்ளது. முழுக்க முழுக்க சைவ முறையில் தயாரிக்க படுவதால் அனைவரும் விரும்பும் ஒரு உணவுகளாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார். மேலும் குழந்தைகள் பிறந்தநாள் விழா, நண்பர்களுடனான அரட்டை, சிறிய அளவிலான விழாக்கள் உள்ளிட்டவைகளுக்கு தேவையான இட வசதிகளும் உள்ளது. அத்தகைய விழாக்களுக்கு முன்பதிவு அவசியம் என தெரிவித்தார். சுமார் 40க்கும் மேற்பட்ட இருக்கைகளுடன் கூடிய இந்த அங்காடின் தனித்துவமான, வடிவமைப்பு, இயற்கையுடன் கூடிய சூழல், வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உணவருந்தும் பகுதிகள், என அனைத்திலும் புதுமையை புகுத்தி இன்றைய இளைஞர்கள், முதல் குழந்தைகள், பெரியவர்கள் வரை அவர்களுக்கு தேவையான உணவுகளை வழங்கி வருகின்றதாகவும் தெரிவித்தார் நண்பகல் 12 மணி முதல் இரவு 11 மணி வரை இயங்கும் இந்த அங்காடியில் ஒரு முறை சென்று வந்தால், அடிக்கடி செல்ல தூண்டும் வகையில், சுவையும், பராமரிப்பும் இருக்கும் என நம்புவதாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்காசி மாவட்ட மக்கள் குறை தீர்ப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது



தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ கே கமல் கிஷோர் தலைமையில் மக்கள் குறை தீர்ப்பு முகாம் நடைபெற்றது தென்காசி மாவட்டம் தலைநகரான தென்காசியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கூட்ட அரங்கில் வாரந்தோறும் திங்கட்கிழமை மக்கள் குறை தீர்ப்பு முகாம் நடைபெறுவது வழக்கம் கடந்த மாதம் நடைபெற்ற சட்டமன்ற பொது தேர்தல் முடிவுகளுக்கு பின் கடந்த வாரம் முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது நேற்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைவிற்கும் முகாமில் இலவச வீட்டு மனை அடிப்படை வசதிகள் செய்து தர கோரி மாற்றுத்திறனாளிகள் விதவைப் பெண்கள் உதவித்தொகை பட்டா மாறுதல் போன்ற வருவாய் துறை சம்பந்தப்பட்ட சுமார் 387 மனுக்கள் பெறப்பட்டது பெறப்பட்ட அனைத்து மனுக்களையும் சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலகம் அளித்த மாவட்ட ஆட்சியர் குறைகளை உடனே நிவர்த்தி செய்து சம்பந்தப்பட்ட மனுதாரருக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் தகவல் தெரிவிக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ.கே.கமல் கிஷோர் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு ஜெயச்சந்திரன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு தண்டபாணி மாவட்ட வழங்கல் அலுவலர் திரு பால்துரை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முத்துராமலிங்கம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்



தேனி மாவட்டம் கம்பம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஜெகநாத் மிஸ்ராவை பெரியகுளம் அரசு போக்குவரத்து கழக பணிமனையில் மத்திய சங்கம் கார்த்திக் தலைமையில் அரசு போக்குவரத்துக் கழக தொழிற்சங்கத்தினர் நேரில் சந்தித்து ஏலக்காய் மாலை அணிவித்து மரியாதை செய்தும், மகுடம் சூட்டியும், பொன்னாடை போர்த்தி கௌரவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர். இந்நிகழ்வின் போது போடி கிளை அலுவலக உதவியாளர் முத்துச்செல்வம், கம்பம் ரஜினி மற்றும் போக்குவரத்துக் கழக பணிமனை பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்கத்தினர் உடனிருந்தனர்.

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 தொடர்பாக

# கணக்கெடுப்பு அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு 19 ந்தேதி முதல் மூன்று நாட்கள் நடைபெறும் பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தார்



ஈரோடு மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதனையொட்டி தற்போது முதல் கட்டமாக வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பானது எதிர்வரும் ஆகஸ்ட 1-ம் தேதி முதல் ஆகஸ்ட 31-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் 2027 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பானது முற்றிலும் நவீனமயமாக்கப்பட்ட டிஜிட்டல் தொழில் நுட்பம் மூலம் இணையதளத்தில் பதிவேற்றம் மூலம் நடைபெறுகிறது.

2027 மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுய கணக்கெடுப்பு (Self Enumeration ஜீலை 17 முதல் 31 வரை) முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது. மாவட்டத்தின் முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலராக ஈரோடு மாவட்ட ஆட்சியர் செயல்படுகிறார். ஈரோடு மாநகராட்சிப் பகுதிக்கு மாநகராட்சி ஆணையர், முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலராகசெயல்படுகிறார். ஈரோடு மாவட்டத்தில் கோபிசெட்டிபாளையம்சார் ஆட்சியரும், ஈரோடு வருவாய் கோட்ட அலுவலரும், கோட்ட அளவிலான மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்களாகசெயல்படுகின்றனர்.

முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பாக 19.05.2026 முதல் 21.05.2026 வரை மூன்று நாட்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு பயிற்சி வகுப்பானது ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கட்டிடத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்று வருகிறது. மேற்படி பயிற்சியானது சென்னை மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரக இணை இயக்குநரால் நடத்தப்படுகிறது. மேலும் மாவட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்கள் உள்ளிட்ட 250 அலுவலர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், சென்னை சென்சஸ் இயக்குநரகம் இணை இயக்குநர் சுபா, சென்னை சென்சஸ் இயக்குநரகம் உதவி இயக்குநர் பிஜி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, சென்னை புள்ளி விவர ஆய்வாளர் அனுப் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை கோபிசெட்டிபாளையம் மற்றும் ஈரோடு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 2026 ஆம் ஆண்டிற்கு ஐ.டி.ஐ சேர்க்கை அறிவிப்பு



கோபிசெட்டிபாளையம் (பெரிய கொடிவேரி) மற்றும் ஈரோடு (காசிபாளையம்) அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 2026 ஆம் ஆண்டிற்கான சேர்க்கை 03.06.2026 அன்று வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (வயது வரம்பு: ஆண்கள் வயது 14 – 40 / பெண்கள் வயது வரம்பு இல்லை )

பத்தாம் வகுப்பு மற்றும்அதற்குமேல்தேர்ச்சி பெற்றவர்கள் 2 வருட கால பயிற்சிபிரிவுகளான எலக்ட்ரீசியன், பிட்டர், மெக்கானிக் மோட்டார் வெகிக்கிள், ரெப்ரிஜெரேசன் மற்றும் ஏர்கன்டிசனிங் டெக்னீசியன், டர்னர், மெஷினிஸ்ட், கோபா, ட்ராப்ட்மேன் சிவில், மற்றும் டெக்ஸ்டைல் வெட் ப்ராஸஸிங் டெக்னீஷியன் ஆகிய தொழிற்பிரிவுகளிலும், எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் வெல்டர் மற்றும் ஒயர்மேன் தொழிற்பிரிவிலும், மேலும் TATA Technology நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்ப மையங்களாக உயர்த்தப்பட்டு அதன் கீழ் புதிய தொழிற்பிரிவுகளான அட்வான்ஸ்டு CNC மிஸினிங் டெக்னீஸியன் 2 வருடம், மெக்கானிக் எலக்ட்ரிக் வெகிக்கிள் 2 வருடம், மேனுபேக்ச்சரிங் கண்ட்ரோல் & ஆட்டோமேசன் -1 வருடம், இன்டஸ்ரியல்ரோபோடிக்ஸ் & டிஜிட்டல் மேனுபேக்ச்சரிங் டெக்னீஸியன் -1 வருடம், பேசிக் டிசைனர் மற்றும் விர்ச்சுவல் வெரிபையர் 2 வருடம், போன்ற தொழிற்பிரிவிலும், பயிற்சியில் சேர கோபிசெட்டிபாளையம் மற்றும் ஈரோடு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தினை நேரில் அணுகவும்.

பயிற்சியில் சேரும் மாணவ மாணவியருக்கு சிறந்த கட்டணமில்லா பயிற்சியுடன் இலவச தங்கும் விடுதி, தமிழக அரசால் மாதம் ரூ.750/- உதவித் தொகை, தமிழ் புதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தில் தகுதியான மாணவ மற்றும் மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000/-உதவித் தொகை, விலையில்லா பாடபுத்தகங்கள், மிதிவண்டி, வரைபடக் கருவிகள், தையற்கூலியுடன் இரண்டு செட் சீருடை, காலணி, மற்றும் கட்டணமில்லாபேருந்து பாஸ் ஆகியசலுகைகள் வழங்கப்படும்.

விபரங்களுக்கு முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், பெரிய கொடிவேரி, கோபிசெட்டிபாளையம், மற்றும் முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஈரோடு (காசிபாளையம்) அவர்களை நேரிலோ அல்லது 94990 55705, 04258-233234, 0424-2275244 ஆகிய தொலைப்பேசி எண்களிலோ தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

### ஈரோடு மாவட்டம், அந்தியூரில்

# பள்ளி மாணவி தற்கொலை செய்து கொண்டது தொடர்பாக எதிரி கைது

"ஈரோடு மாவட்டம், அந்தியூரில் பாலியல் தொல்லை காரணமாக 11ம் வகுப்பு மாணவி தற்கொலை என புகார் காரணமான இளைஞரை காவல்துறை கைது செய்யவில்லை என பெற்றோர் குற்றச்சாட்டு" என தனியார் தொலைக்காட்சியில் செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து, விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்ள ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால், பவானி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் பணிக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, முருகேசன் (43), த/பெ.ராமர், அந்தியூர் என்பவர் கடந்த 22.04.2026 அன்று அந்தியூர் காவல் நிலையத்தில் அளித்த புகாரில், தனது மூத்த மகள், 11ம் வகுப்பு தேர்வு எழுதிவிட்டு வீட்டில் இருந்து வந்த நிலையில், தனது மகள் ஒரு நபரை காதலித்து வந்ததாகவும், தற்போது அவர் தனது மகளிடம் தொடர்ந்து பிரச்சனை செய்ததால், கடந்த 21.04.2026 அன்று தன்னிடம் கூறி அழுததாகவும், மறுநாள் 22.04.2026 அன்று தனது மகளின் அலைபேசிக்கு அழைத்த நபர் தகாத வார்த்தைகளால் தனது மகளை பேசியதாகவும், அதனால்தனது மகளை தனது மாமியார் வீட்டிற்கு அனுப்பிய நிலையில், அங்கு இருந்த தனதுமகள் தூக்குபோட்டு இறந்துவிட்டதாகவும், நடவடிக்கை கோரி கொடுத்த புகாரின்பேரில், அந்தியூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்) மற்றும் காவல் துணைக் கண்காணிப்பாளர், பவானி உட்கோட்டம் ஆகியோர் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி அலைபேசியில் பேசிய நபர் சதீஷ் (18), த/பெ.லேட். மணிகண்டன், க.எண்.34, கீழ் தனியாளம்பட்டு, உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் என தெரியவந்தது. மேற்படி நபர் தனது அலைபேசியை அணைத்துவிட்டு, தலைமறைவாக இருந்துவந்த நிலையில், கடந்த 5 வாரங்களாக எடுத்த தொடர் முயற்சியின் விளை வாக, கிடைக்க ப்பெற்ற தகவலின்பேரில், (18.05.2026) அன்று விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கீழ் தனியாளம்பட்டு என்ற கிராமத்தில் மேற்படி சதீஷ் என்பவர் தனிப்படையினரால் பிடிக்கப்பட்டு, விசாரணைக்காக அந்தியூர் காவல்நிலையம்கொண்டு வரப்பட உள்ளார். தொடர்ந்து, விசாரணைக்குப்பின் எதிரியை கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட உள்ளார் என்பதை ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

# ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தென்மேற்கு பருவமழை 2026 முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நேற்று ( 18.05.2026) தென்மேற்கு பருவமழை 2026 முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

தென்மேற்கு பருவமழை காலத்தில் ஏற்படும் இயற்கை இன்னல்களை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது குறித்து முன்னேற்பாட்டு கூட்டம் நடைபெறுகிறது. தென்மேற்கு பருவமழை–2026 காலத்தில் ஏற்படும் மழை,வெள்ளம் போன்ற இயற்கை இன்னல்களை எதிர்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு வட்டாரஅளவில் முன்னெச்சரிக்கை குழு,தேடுதல் மீட்பு குழு,நிவாரண முகாம் மேலாண்மைக் குழு சிறப்பு குழு அமைத்து பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழையினால் ஏற்படும் பேரிடர் தொடர்பாக உடனுக்குடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இயங்கிவரும் தொலைபேசிஎண்:1077, 0424–2260211–ல் தெரிவிக்கவேண்டும்.வருவாய் கோட்டம் மற்றும் வட்ட அலுவலகங்களில் 24x7 இயங்குமாறு கட்டுப்பாட்டு அறை அமைத்து அலுவலர்களுக்குமுறைப்படி பணி வழங்கவேண்டும். மழை அளவு மற்றும் சேத விபரங்களை ஒவ்வொரு நாளும் காலை 07.00 மணிக்குள் 1077 என்ற எண்ணிற்கு தெரிவிக்க வேண்டும். மேலும், மழைமானி நிலையங்களை சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தணிக்கை செய்து மழைமானிகள் நல்ல நிலையில் உள்ளதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.WHF/HFசெட்டுகள் பயன்பாட்டில் உள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.தன்னார்வலர்கள் மற்றும் பேரிடர்காலகாவலர்கள் / முதல்நிலைமீட்பாளர்கள் தங்களது பகுதியில் மழை, புயல்,வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தகவல்களை தெரிவிக்க ஏதுவாக வட்டாட்சியரின் தொடர்பு எண்களை அவர்களிடத்தில் தெரிவிக்கவேண்டும்.

தேவையான அடிப்படை வசதிகளுடன் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட வேண்டும். நிவாரண முகாம்களில் தேவைக்கேற்றபடி கழிவறை வசதிகள் ஏற்படுத்த வேண்டும். மின்சாரத் தடை ஏற்படாத வண்ணம் ஜெனரேட்டர் வசதி செய்து தரவேண்டும். மாற்றுத்திறனாளிகள், மூத்தகுடி மக்கள்,கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கும் என தனியாக அறை ஒதுக்கீடு செய்துதரவேண்டும். ஒவ்வொரு நிவாரண முகாமிலும் சக்கர நாற்காலி மூலம் இருக்கவேண்டும்.நீர்வள ஆதாரத்துறையின் செயற்பொறி யாளர்கள் தயார்நிலையில் இருக்க வேண்டும். நியமனம் செய்யப்படவேண்டும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் வெள்ளப்பாதிப்பு குறைவாக,மிதமாக மற்றும் அதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து அப்பகுதிகளுக்கு மணல் மூட்டைகள் மற்றும் நீர் இறைக்கு இயந்திரம் எடுத்துச் செல்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் Mock Exercise– மாதிரி ஒத்திகைப் பயிற்சி நடத்தவேண்டும். தீயணைப்புதுறையின் சார்பில் அரசு அலுவலகங்கள்,பொதுமக்கள் அதிகமாகவந்துசெல்லும் வணிக வளாகங்கள்,பள்ளிக்கூடங்கள்,கல்லூரிகள் ஆகிய இடங்களில் அவசரகால செயல்பாடு குறித்த ((Mock drill) மாதிரி ஒத்திகைப் பயிற்சி நடத்தவேண்டும்.

போக்குவரத்துதுறையின் மூலம் தனியார் பேருந்துகள் லாரிகள் விபரங்களை சேகரம் செய்துவைக்கவேண்டும். ஓட்டுநர்/நடத்துனர்களை அவசரகாலங்களில்பணிபுரிய தயார்நிலையில் இருக்கவேண்டும். தாழ்வான பகுதிகளில் போக்குவரத்து பாதைக்கு பதிலாகமாற்றுப்பாதையினை பயன்படுத்தவேண்டும். தமிழ்நாடுமின்சாரவாரியம்மூலம்பருவமழைகாலத்தில் பாதிக்கப்பட்டபகுதிகளில் நேரில் சென்றுதேவைப்படும் நேரங்களில் முக்கியமான இடங்களில் மின்சார இடையூறுகளை பழுதபார்க்க 24 மணிநேரமும் அலுவலர்கள் பணியில் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். சுகாதாரத்துறையின் மூலம் மழைகாலங்களில் மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் தேவையானவற்றை தயார்நிலையில் வைத்திருவெள்ளநீர் தேங்கும் இடத்தில் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புதுறையின் மூலம்தேவையானஅளவு அத்தியாவசிய பொருட்கள் குடோனில் இருப்புவைத்துக் கொள்ளவேண்டும். மலைப்பகுதியில் 2–3 மாதங்களுக்குதேவையான அத்தியாவசிய பொருட்கள் இருப்புவைத்துக் கொள்ள வேண்டும். மேலும், ரேஷன் பொருட்களை பாதுகாப்பான பகுதிகளில் சேகரித்து வைக்கவேண்டும்.பள்ளிக் கல்வித்துறையின் மூலம் மாவட்ட கல்வி அலுவலர் அனைத்துவிதமானமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வெள்ளப்பெருக்கு காலங்களில் அப்பகுதியல் உள்ளபள்ளிகள் தற்காலிக நிவாரண முகாம்கள் அமைக்க பயன்படுத்தப்படும் பள்ளி மாணவ/மாணவியர்கள் பாதுகாப்பு உறுதிசெய்ய வேண்டும்.கால்நடைப் பராமரிப்புத்துறையின் மூலம்தேவையானஅளவு மருந்துப்பொருட்கள் மற்றும் கால்நடை தீவணங்கள் இருப்புவைத்துக் கொள்ளவேண்டும். முதல் நிலை மிட்பாளர்களுடன் இணைந்து செயல்படவேண்டும். பேரிடர்காலங்களில் தடையின்றிபால் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். பால்பவுடர் தேவையான அளவு இருப்பு உள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும். வேளாண்மைத்துறையின் மூலம் விதைகள்,உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தேவையான அளவு இருப்புவைத்துக்கொள்ள வேண்டும்.தினசரிசேதார விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.குடிசைமாற்று வாரியம் மூலம் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு வளாகங்கள் மற்றும் கட்டடங்களில் உள்ள குப்பைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும்,மாநகராட்சிகள்,நகராட்சிகள் / பேரூராட்சிகள் / ஊராட்சிகள் வெள்ளம் செல்ல கூடியபகுதிகளில் நீர்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள் தூர்வாரி சுத்தம் செய்யவேண்டும். ஏரி,குளம் நீர்நிலைகளில் உள்ளதடைகள் மற்றும் ஆக்கிரமிப்புகளை நீக்கப்படவேண்டும். குடிநீரில் சரியானஅளவில்குளோரின் சேர்த்து வழங்க வேண்டும்.பொதுப்பணித்துறையின் மூலம் நீர்தேக்கி வைப்பதற்கான தடுப்பணைகள் பழுது ஏற்பட்டு இருப்பின் அதன் பழுதுகளைசரிசெய்யவேண்டும். அணைகள், ஆறுகள்,ஏரிகள் மற்றும் நீர்நிலைகளின் கரைகளில் நீர்வளத்துறை செயற்பொறியாளர்கள் நடந்தே சென்று ஆய்வு மேற்கொண்டு கரைகளில் உடைப்பு ஏற்படாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் அணைகள் மற்றும் ஏரிகளின் கதவுகள்,மதகுகள் ஆகியன சரிவர இயங்குவதை சம்பந்தப்பட்ட நீர்வளத்துறை செயற்பொறியாளர்கள் உறுதி செய்வதோடு சரிசெய்து அறிக்கை அனுப்ப வேண்டும். அவைகளை உடனடியாகமதகுகளையும்,குறுக்கணைகளையும் சரிசெய்யவேண்டும். அரசுபள்ளி /கல்லூரி / தனியார்பள்ளி /கல்லூரி கட்டடங்கள் மற்றும் அரசுஅலுவலககட்டடங்கள் உறுதித்தன்மையினை தணிக்கை செய்து பராமரிப்புபணிகள் மேற்கொள்ளவேண்டும். அனைத்துத்துறைஅலுவலர்களும் மழைநீர் சேகரிப்புதிட்டத்தில் கவனம் செலுத்தி,செயல்படாத ஆழ்துளை கிணறுகள், வறண்ட ஆழ்துளை கிணறுகள் ஆகியவற்றினை நிலத்தடிநீர்சேமிப்புஆழ்துளை கிணறுகளாக மேற்கொள்ளவேண்டும் என தெரிவித்தார். மாற்ற நடவடிக்கை

இக்கூட்டத்தில்மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் தமிழக வெற்றிக் கழகத்தின் கொளாநல்லி ஊராட்சி செயலாளர் க.அம்சு சுப்ரமணி தலைமையில் அப்பகுதியில் +2 தேர்வில் சிறந்த மதிப்பெண் எடுத்த மாணவிகள் கனிஷ்கா மற்றும் தேவிஸ்ரீ இருவரையும் சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்

# தடைசெய்யப்பட்ட குட்கா பொருட்கள் பறிமுதல் மற்றும் எதிரி கைது

ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி அவர்களின் நேரடி மேற்பார்வையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


இந்நிலையில் 18.05.2026 ம் தேதி அன்று தடைசெய்யப்பட்டகுட்கா பொருட்களை பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், ஈரோடு நகர காவல் நிலைய போலீசார் ஈரோடு ஆர். கே.வி சாலை, கிருஷ்ணா தியேட்டர் சந்திப்பில் சோதனை மேற்கொண்ட போது கிருஷ்ணம்பாளையம், சிந்தன்நகர்4வதுவீதியை சேர்ந்த முகமது பாரூக் என்பவரின் மகன் சாகுல் ஹமீது(37) என்பவர் சுமார் 2,43,668 ரூபாய் மதிப்புள்ள 213 கிலோ தடைசெய்யப்பட்ட குட்கா பொருட்களை வைத்திருந்தவரை கைது செய்தும், பொருட்களை பறிமுதல் செய்தும், நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. மேலும் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

# போதை பொருட்கள் தடுப்புபடை நடத்திய சோதனையில் சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த பீகாரை சேர்ந்த இரண்டு நபர்கள் கைது




தமிழக முதல்வர் ஆணையின் பேரில் போதை பொருட்கள் ஈரோடு மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தடுப்பு படை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் சுருதி நேரடி மேற்பார்வையில் பல்வேறு போதை பொருட்கள் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் 17.05.2026–ம் தேதி அன்று ஈரோடு மாவட்டம் சித்தோடு, கொங்கம்பாளையத்தில் போதை பொருட்கள் தடுப்பு படை போலீசார் நடத்திய சோதனையில் தனியார் டெக்ஸ்டைல்ஸில்பணிபுரியும்பீகாரை சேர்ந்த 1) அண்டு குமார் (19), த/பெ ஸ்ரீகாந்த் சிங், வில்லேஜ் சோனி, பீகார் மற்றும் 2) லால்பாபு சௌத்ரி (25),த/பெ அவதேஸ் சௌத்ரி, தர்ஷன் ரோக்டாஸ், பிப்ரா, பீகார் ஆகியோர் தங்கியிருந்த வீட்டிலிருந்து ரூ.50,000/– மதிப்புள்ள 2.00 கிலோ எடை கொண்ட கஞ்சா கைப்பற்றப்பட்டது.மேற்படி சட்டவிரோதமாக கஞ்சாவைத்திருந்தஎதிரிகளை கைது செய்து, வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. மேலும் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில்தெரிவிக்கப்படுகிறது.

# குற்றாலத்தில் சுற்றுலா பயணிகளுக்கு தொல்லை தரும் நாய்கள் கால்நடை மாடுகள்




குற்றாலத்தில் தற்போது சீசன் துவங்க உள்ள நிலையில் பூங்காக்களில் நாய்கள், மாடுகள் தொந்தரவு அதிகரித்து வருவதால் குழந்தைகளை பூங்காவிற்கு அழைத்து வரும்சுற்றுலாபயணிகளும், பொதுமக்களும் அச்சமடைந்து வருகின்றனர். தமிழகத்தின் புகழ் பெற்ற சுற்றுலா ஸ்தலங்களில் குற்றாலம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஏழைகளின் ஊட்டி என்றும் எல்லோராலும்அழைக்கப்படுகிறது புராண, இதிகாசங்களிலும் பேசப்படும் குற்றாலம் ஆன்மீகம் மற்றும் இயற்க்கை சுற்றுலா ஸ்தலங்களில் முதன்மை பெற்றதாகும். இங்கு ஆண்டு தோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தென் மேற்கு பருவ மழையின் போது சீசன் நிலவும். மெயின் அருவி ஐந்தருவி ,பழைய குற்றால அருவி, புலி அருவி, சிற்றருவி உட்பட அனைத்து அருவிகளிலும்தண்ணீர்கொட்டும். இதனால் தமிழகத்தில் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா உட்பட இந்தியாவின் பல பாகங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வர். அதே போல ஐயப்ப சீசனான கார்த்திகை,மார்கழி,தை மாதங்களில் இங்கு ஐயப்ப பக்தர்களின் கூட்டம் அலை மோதும். சபரி மலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் குற்றாலம் வந்து செல்வதை வாடிக்கையாக கொண்டுள்ளதால் நிககு ற்றாலம் இரவும் பகலும் ஜே ஜே என்று காட்சியளிக்கும். ஏழை சுற்றுலா பயணிகளின் ஊட்டி என்றழைக்கப்படும் குற்றாலத்தில் டவுண் பஞ்சாயத்து மூலம் பல பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அலுவலகம் எதிரில் உள்ள பூங்கா முக்கியமான பூங்காவாகும். இங்கு சிறுவர் சிறுமியர்கள் விளையாட பல்வேறு வசதிகள் உள்ளது. இதனால் குற்றாலம் வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் குழந்தைகளை இந்த பார்க்கிற்கு அழைத்து வந்து விளையாட வைப்பார்கள். 1 இந்த பூங்கா முறையான பராமரிப்பு இல்லாததால் பூங்காக்களில் நாய்கள் மற்றும் மாடுகளின் தொந்தரவு அதிகமாக உள்ளது. இதனால் பூங்காவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பொதுமக்கள் தங்கள் குழந்தைகளோடுசீசனை அனுபவிப்பதில் மிகவும் சிரமப்படு கின்றனர் இதற்கு மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுற்றுலா பயணிகள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது

# கர்நாடகா மாநில மதுபானங்களை விற்பனை செய்ய சட்டவிரோதமாக கொண்டு வந்த நபர் கைது



ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் சுருதி நேரடி மேற்பார்வையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 17.05.2026–ம் தேதி அன்று கர்நாடகா மாநில மதுபானங்களை விற்பனை செய்வதற்காகசட்டவிரோதமாக கொண்டுவருவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சிறப்பு தனிப்படை குழு, தாளவாடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட திகினாரை, கரளவாடி பிரிவில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது மணி–33, த/பெ மஞ்சய்யா, 4/203, திகினாரை, தாளவாடி என்பவர்தனது Mahindra Supro TN 65 AJ 1351 என்ற நான்கு சக்கர வாகனத்தில்அதிகலாபத்திற்க்கு விற்பனை செய்யும் நோக்கத்துடன் கொண்டு வந்த கர்நாடகா மாநில மதுபானம் தலா 90 ML அளவுள்ள Original Choice Brandy–139 Pockets மற்றும் 375 ML அளவுள்ள Original Choice Brandy–04 ஆகியவை கைப்பற்றப்பட்டது.மேலும்எதிரியிடம் இருந்த பணம் ரூ.1,80,000/– மற்றும் அவரது நான்கு சக்கர வாகனம் ஆகியவை பறிமுதல்செய்யப்பட்டு, எதிரிகைதுசெய்துநீதிமன்ற காவலுக்கு அனுப்பபட்டது. மேலும் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

# தூத்துக்குடியில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.68.42 லட்சம் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்!



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திங்கள்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர்விஷு மகாஜன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து மொத்தம் 450 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, பயனாளிகளுக்கு லட்சக்கணக்கான ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த பொதுமக்களிடம் இருந்து கல்வி உதவித்தொகை, இலவசவீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல் உத்தரவு, வரன்முறைப்படுத்தி பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு வேண்டுதல், தொழில் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 410 மனுக்கள் பெறப்பட்டன. இந்த மனுக்கள் மீது உரிய காலத்திற்குள் சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துறைசார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

மேலும், கடந்த வாரம் (மே 11) நடைபெற்ற குறைதீர்க்கும் கூட்டத்தில் மனு அளித்த 7 நபர்களுக்கு உடனடித் தீர்வாக, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் 'அனைவருக்கும்வீடு' திட்டத்தின் கீழ் (வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் கட்டும் திட்டம்) தலா ரூ.9.63 லட்சம் மதிப்பீட்டிலான குடியிருப்பு ஒதுக்கீடு ஆணைகளை ஆட்சியர் விஷு மகாஜன் வழங்கினார். இதன் மொத்த மதிப்பு ரூ.67.41 லட்சம் ஆகும். மாவட்ட வருவாய் அலுவலர் மூ. குருச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் (ச. பா.தி) / மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தில்வேல் முருகன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சாந்தி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பிரமநாயகம், துணை ஆட்சியர் (பயிற்சி) மகேந்திரன் மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழக முதலமைச்சர் பெயரைப் பயன்படுத்தி கலெக்ஷன், கரப்ஷன் போன்ற முறைகேடுகளில் ஈடுபட்டால் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் தூத்துக்குடி தொகுதி எம்.எல்.ஏ. ஸ்ரீநாத் எச்சரித்துள்ளார்



நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் சுமார் 37,000 வாக்குகள் வித்தியாசத்தில் பிரம்மாண்ட வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நடிகர் ஸ்ரீநாத் எம்.எல்.ஏ., இன்று (திங்கட்கிழமை) காலை தூத்துக்குடியில் தனது புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை முறைப்படி திறந்து வைத்து, தொகுதி மக்களின் குறைதீர்க்கும் பணிகளை முறைப்படி தொடங்கினார்.

அலுவலகத் திறப்பு விழாவைத் தொடர்ந்து தொகுதிப் பொதுமக்கள் பலரிடம் இருந்து கோரிக்கை மனுக்களை அவர் நேரடியாகப் பெற்றுக் கொண்டார். பின் செய்தியாளர்களைச் சந்தித்த ஸ்ரீநாத் எம்.எல்.ஏ., "தூத்துக்குடி மாநகரப் பகுதியில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் நிலவி வரும் சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள் குறித்து அடுத்த சில நாட்களில் நானே நேரில் சென்று அதிரடி ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளேன்.

நகரின் மையப் பகுதியில் உள்ள கோவில்கள், ஆலயங்கள், தேவாலயங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு மிக அருகில் விதிகளை மீறிச் செயல்பட்டு வரும் டாஸ்மாக் மதுபானக் கடைகளை உடனடியாகக் கண்டறிந்து, அவற்றை முற்றிலுமாக மூடுவதற்குத் தேவையான அனைத்துச் சட்டப்பூர்வ நடவடிக்கைகளும் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்படும்.

மேலும், தூத்துக்குடி மாநகராட்சியின் மிக முக்கியப் பிரச்சினையான பக்கிள் ஓடை கழிவுநீர் மற்றும் ஆலைகளின் அசுத்த நீர் எவ்விதச் சுத்திகரிப்பும் இன்றி நேரடியாகக் கடலில் கலந்து கடல்வளத்தையும், மீனவ மக்களின் வாழ்வாதாரத்தையும் பாழாக்குவது குறித்துத் துறைசார்ந்த அதிகாரிகளுடன் இணைந்து நேரில் ஆய்வு செய்து, அதற்கு நிரந்தரத் தீர்வு காண முன்னுரிமை வழங்கப்படும்.

தமிழக முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, தூத்துக்குடியில் மக்கள் நலன் சார்ந்த நேர்மையான நிர்வாகம் மட்டுமே நடைபெறும். தமிழக முதல்வர் மற்றும் கழகத்தின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி எவரேனும் ஆடம்பரம், தேவையற்ற ஆர்ப்பாட்டம், பொதுமக்களிடமும் வணிகர்களிடமும் கலெக்ஷன் செய்தல் அல்லது அதிகார துஷ்பிரயோகம் மூலம் கரப்ஷன் போன்ற தவறான செயல்களில் ஈடுபட்டால், அவர்கள் எவ்வளவு பெரிய பொறுப்பில் இருந்தாலும் அவர்கள் மீது கட்சி ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் மிகக் கடுமையான, தயவுதாட்சண்யமற்ற நடவடிக்கைகள் பாயும்" என எச்சரித்தார்.

இந்நிகழ்வின் போது, தவெக தூத்துக்குடி மத்திய மாவட்டச் செயலாளர் சாம்ராஜ், வடக்கு மாவட்டக் காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமி, முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அருட்தந்தையர்கள், உடனிருந்தனர்.



# தயக்கமின்றி படித்தால் அரசு பணியாளர் தேர்வுகளில் வெற்றி பெறலாம்

பந்தலூர் டியூஸ் பள்ளி கூட்ட அரங்கில், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், பவித்ரா தட்டச்சு பயிற்சி மையம், மகாத்மா காந்தி பொது சேவை மையம் மற்றும் டியூஸ் பள்ளி நிர்வாகம் இணைந்து, மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் அகில இந்திய அளவில் 128வது இடம் பெற்ற அருண் வடிவரசனை பாராட்டும் விழாவும், போட்டித் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும், தட்டச்சு பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா என முப்பெரும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். டியூஸ் பள்ளி முதல்வர் சுதீந்திரநாத் வரவேற்றார். மகாத்மா காந்தி பொது சேவை மைய தலைவர் நௌஷாத், பந்தலூர் அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியர் தண்டபாணி, தேவாலா அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் கிருஷ்ணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூடலூர் மின்சார வாரிய செயற்பொறியாளர் முத்துகுமார் மற்றும் கூடலூர் காசிகா ஐஏஎஸ் அகாடமி நிறுவனர் சுரேஷ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அகில இந்திய அளவில் 128வது இடம் பெற்ற அருண் வடிவரசன் பேசுகையில், "பள்ளி பருவத்திலேயே பாடங்களை புரிந்து படிக்கவேண்டும். புரிந்து படித்தால் அது மனதில் நிலைத்து நிற்கும். மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியமும் குறையும். 2019 முதல் மத்திய அரசு பணியாளர் தேர்வுகளுக்குத் தயாராகி வந்தேன். 2022-ஆம் ஆண்டு வனத்துறை பணிகள் குறித்து அறிந்து அதற்கான தயாரிப்பில் தீவிரமாக ஈடுபட்டேன். தொடர்ந்து முயற்சி செய்ததன் பலனாக வெற்றி பெற முடிந்தது, "ஒருநாளைக்கு எவ்வளவு நேரம் படிக்கிறோம் என்பதைக் காட்டிலும், எப்படி படிக்கிறோம் என்பதே முக்கியம். தங்களது சூழ்நிலைக்குஏற்ப திட்டமிட்டு முயற்சி செய்தால் போட்டித் தேர்வுகளில் எளிதில் வெற்றி பெற முடியும். தற்போது மத்திய அரசு தேர்வுகளில் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றாலே அரசு மற்றும் சில தன்னார்வ அமைப்புகள் மாதந்தோறும் ரூ.8,000 வரை உதவித்தொகை வழங்குகின்றன. தமிழக அரசு பாடத்திட்டமும் மத்திய மற்றும் மாநில அரசு பணியாளர்கள் போட்டித் தேர்வுகளுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது. தயக்கமின்றி தொடர்ந்து படித்தால் அரசு பணியாளர் தேர்வுகளில் வெற்றி பெறலாம்," என்றார்.

தொடர்ந்து பந்தலூர் தேவாலா பயிற்சி மையங்களில் தட்டச்சு பயிற்சி முடித்த மாணவர்களுக்கு அரசு பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் எழுந்தருளியுள்ள காமாட்சியம்மன் கோவில் பொங்கல் திருவிழா வருகிற (மே.21) வியாழக்கிழமை நடைபெறுகிறது. இவ்விழா முன்னதாக நேற்று முன்தினம் ஏராளமான பெண்கள் நான்கு ரத வீதிகளில் தீர்த்தம் மற்றும் பால்குடம் சுமந்து வந்து பாலாபிஷேகம் செய்தனர். இதனைத் தொடர்ந்து மே.20 மாவிளக்கு, 21ம் தேதி பொங்கல் விழா நடைபெறுகிறது. பொதுமக்கள் விழாவில் கலந்து அம்மன் அருள் பெற நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.

# ஈரோடு பேருந்து நிலையம் அருகே போக்குவரத்து போலீசார் தீவிர விழிப்புணர்வு:

## ஹெல்மெட் அணியவும், மதுபோதையில் வாகனம் ஓட்ட வேண்டாம் எனவும் அறிவுறுத்தல்



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் ஆணைக்கிணங்க, ஈரோடு டவுன் டிஎஸ்பி முத்துக்குமார் அவர்களின் அறிவுரையின்படி, ஈரோடு பேருந்து நிலையம் மற்றும் ஸ்வஸ்திக் கார்னர் ரவுண்டானா பகுதிகளில் போக்குவரத்து விதிமுறைகள் குறித்த தீவிர விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. ஈரோடு வடக்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அந்த வழியாகச் சென்ற இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு பல்வேறு முக்கிய அறிவுரைகள் வழங்கப்பட்டன.

குறிப்பாக, இருசக்கர வாகனங்களை ஓட்டும் போது ஹெல்மெட் அணிவது கட்டாயம் என்றும், எந்தக் காரணத்தைக் கொண்டும் மது போதையில் வாகனங்களை இயக்கக் கூடாது என்றும், அரசு விதிமுறைகளின் படி வாகனத்திற்குரிய முறையான ஆவணங்களை எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்றும் போலீசார் நேரடியாக எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்த விழிப்புணர்வு நிகழ்வில் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் சண்முக மூர்த்தி உட்பட போலீசார் கலந்து கொண்டனர்.

# கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, கலப்பு திருமண நிகழ்ச்சி நடைபெற்றது; இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது



கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டலஅலுவலகம்அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணை தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார். இவரது தலைமையில் இன்று கலப்பு திருமணம் நடைபெற்றது. கோவை மாவட்டம் உப்பிலிபாளையம்பகுதியைசேர்ந்தவர் ஜமால் முகைதீன்-40.

வயதான இவர், முதலிபாளையம் பகுதியை சேர்ந்த சசிகலா என்ற 26வயது பெண்ணை, கடந்த எட்டு வருடங்களாக காதலித்து வந்த நிலையில் இருவரும் வேறு வேறு சமூகம் என்பதால் இருவரது வீட்டிலும், இவர்களின் காதலுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் இன்று, தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. மணமகன் வீட்டு உறுப்பினர்கள் பலர் முன்னிலையில், இந்து முறைப்படி, தாலி கட்டி, தனது மனைவியாக ஏற்று கொண்டார். தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டது. இந்த நிகழ்வில்,

வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் செல்வராஜ், லட்சுமி, திவ்யா, கவுண்டம்பாளையம் லட்சுமி, வைத்தியர் பாலகிருஷ்ணன், முருகன், சிறுபான்மை பிரிவு தலைவர் அருள் தாஸ், பால் ராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டம் பவானிசாகர் விதைகள் வாசகர் வட்டம் அமைப்பினர் நேற்று முன்தினம் மே.18 காலை, பவானிசாகர் தவெக எம்எல்ஏ தமிழ்ச்செல்வியைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். அப்போது ரங்கசமுத்திரம் பகுதியில் கிளை நூலகம், சத்தியில் சமுதாயக்கூடம்,சத்தியமங்கலம்மொழிப்போர்தியாகிமுத்துபெயரைஅரசுசார்இடத்திற்கு பெயர் சூட்ட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை மனுவாக அளித்தபோது, எம்எல்ஏ வின் சிறப்பு உரிமை மூலம் நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளார்.

# Umar Khalid's interim bail plea to take care of ailing mother rejected by Delhi court



*A Delhi court on Tuesday dismissed an interim bail plea moved by JNU student activist Umar Khalid, seeking to take care of his ailing mother and take part in post-death rituals of his uncle.*


*The order was passed by Additional Sessions Judge Sameer Bajpai of Delhi's Karkardooma court. Umar Khalid and others were booked under the Unlawful Activities (Prevention) Act (UAPA), an anti-terror law, and provisions of the Indian Penal Code (IPC) for allegedly being the "masterminds" of the 2020 riots that left 53 people dead and more than 700 injured in northeast Delhi.*

*The violence had erupted during widespread protests against the Citizenship (Amendment) Act (CAA) and the National Register of Citizens (NRC). The fresh setback comes a day after a sliver of hope emerged for Umar Khalid as the Supreme Court criticised its January 5 judgment denying him bail and activist Sharjeel Imam in the alleged larger conspiracy case linked.*

*The top court bench emphatically held that "bail is the rule and jail is an exception" even in prosecutions under the Unlawful Activities (Prevention) Act (UAPA). A bench of justices BV Nagarathna and Ujjal Bhuyan, while granting bail to Jammu and Kashmir resident Syed Iftikhar Andrabi in a narco-terror case investigated by the National Investigation Agency (NIA), expressed "serious reservations" about the reasoning adopted earlier this year by another two-judge bench comprising justices Aravind Kumar and NV Anjaria in the Delhi riots conspiracy case, as reported by HT earlier.*



ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் செயற்குழுக்கூட்டம் மாவட்டஅவைத்தலைவர்குமார்முருகேஷ்தலைமையில், ஈரோடு தெற்குதிமுக மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அறிவாலயம், அண்ணா அரங்கத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சித்தோடு பேரூராட்சி குப்பை கிடங்கில் மேற்கு சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றிக் கழக எம்எல்ஏ ஆனந்மோகன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது குப்பை கிடங்கால் பொதுமக்களுக்கு மூச்சுத் திணறல் தோல் சம்பந்தமான நோய் தொற்றுகள் ஏற்படுவதாகவும் ஆழ்துளை கிணற்று நீர் முழுவதுமாகபாதிக்கப்பட்டுஇருப்பதாகபொதுமக்கள்குற்றச்சாட்டுகளைமுன்வைத்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.